ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2038/73 - 2017 සැප්තැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2017.09.29

*2038/73 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### கிழக்கு மாகாண மாகாண சபை

கிழக்கு மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் பிரிவு II பந்தி 8.1 (எ), (ஏ) மற்றும் (ஐ) i உப பந்திகளின் கீழ் அதிகாரமளிக்கப்படும் கட்டளைகள் இத்துடன் பிரசுரிக்கப்படுகின்றது.

இக் கட்டளைகள் 2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படும்.

Z. A. நசீர் அஹமட் (பொறியியலாளர்),
முதலமைச்சர், நிதித் திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம்,
உள்ளூராட்சி மற்றும் பிராந்திய நிருவாகம், கிராம அபிவிருத்தி, சுற்றுலா மற்றும் சூழல்,
கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் கிராமியக் கைத்தொழில்
மற்றும் வீடமைப்பு அமைச்சர்,
கிழக்கு மாகாணம்.

01. இக் கட்டளைகள் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் "2017 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதிகளை உறுதிப்படுத்தும் கட்டளைகள்" எனக் குறிப்பிடப்படுவதுடன் குறிப்பிட்ட கட்டளைகள் 2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

#### பிரிவு I - சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் சீருடை

02. கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் அல்லது ஏனைய அதிகார சபையொன்றின் ஊடாக பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து பேரூந்துகளிலும் கடமையாற்றும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் குறித்த பேரூந்தில் கடமையாற்றும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதிகார சபையினால் பணிக்கப்பட்டவாறான சீருடைகளை அணிந்து கடமையாற்றுதல் வேண்டும்.

03. சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான சீருடையானது கீழ்வரும் அட்டவணை 01 இல் விபரிக்கப்பட்ட சீருடையாக இருத்தல் வேண்டும்.

04. சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் அணிய வேண்டிய அலுவலக அடையாள அட்டை கீழ்வரும் அட்டவணை 02 இற்கு ஏற்றவாறாக தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

05. இவ் விதிமுறைகளில் குறிப்பிட்ட மேல் உடுப்பு (சட்டை) அணியும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும், சாரதி அல்லது நடத்துநர் கணுக்கால் வரை காற்சட்டை அல்லது சாரம் அணிய வேண்டும்.

06. கடமையாற்றும் நேரம் என்பது குறிப்பிட்ட பேரூந்து குறிப்பிட்ட நாளில் முதலாவது பயணத்திற்கு வழங்கப்பட்ட நேரத்திலிருந்து இறுதிப் பயணத்திற்கு வழங்கப்பட்ட நேரம் வரையான முழுமையான நேரம் உள்ளடங்கலாக கருத்திற் கொள்ளப்படும்.

07. சீருடை மற்றும் அடையாள அட்டை என்பன அதிகார சபையினால் பணிக்கப்பட்டவாறாக அன்றி மாறாக அமைந்திருப்பின் சீருடை மற்றும் அடையாள அட்டை அணிந்திருக்கவில்லை எனக் கருத்திற் கொள்ளப்படும்.

08. குறிப்பிட்ட பேரூந்திற்குரிய பயண முறையைப் பெற்றுக் கொள்ளும் போது குறிப்பிட்ட பேரூந்தில் சாரதி மற்றும் நடத்துநர் சீருடை மற்றும் அடையாள அட்டை அணியாதவிடத்து, நேரக் கணிப்பாளரால் குறிப்பிட்ட பேரூந்தின் பயணத்தை நிறுத்தி அது தொடர்பாக குறிப்பிட்ட நிலையப் பொறுப்பதிகாரியிடம் அறிவித்தல் வேண்டும்.

09. அதிகார சபையினால் பணிக்கப்பட்டவாறாக சீருடை மற்றும் அடையாள அட்டை அணியாத சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனரா என ஆராய்ந்து பார்க்கும் பொறுப்பு குறிப்பிட்ட பேரூந்து அனுமதிப் பத்திர உரிமையாளரது கடமையாகும்.

10. அதிகார சபையினால் பணிக்கப்பட்டவாறாக சீருடை மற்றும் அடையாள அட்டை அணியாத சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனில் அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் இக் கட்டளைகளை மீறுபவர்களாக கருதப்படுதல் வேண்டும்.

11. சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் சீருடையை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதுடன், சீருடை மற்றும் அடையாள அட்டை தொடர்பாக அதிகார சபையினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கு அமையப் பின்பற்றுதல் வேண்டும்.

12. (1) சீருடை மற்றும் அடையாள அட்டை தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளை மீறும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் குற்றம் இழைத்ததுடன் கீழ்வரும் அட்டவணை 03 இன் நிரல் 09 இற்குரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு கட்டுப்படுவார்கள்.

(2) சீருடை மற்றும் அடையாள அட்டை தொடர்பாக மூன்றாவது தடவையின் பின்னரும் கட்டளைகளை மீறும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தமது சாரதி/நடத்துநர் பதிவினை இழப்பதுடன் அப்பதிவு நீக்கம் அதிகார சபையினால் குறிப்பிட்ட சாரதிக்கு/ நடத்துநருக்கு அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் அதிகார சபையினால் வழங்கப்பட்ட சாரதி/நடத்துநர் அடையாள அட்டை குறிப்பிட்ட சாரதி/நடத்துநரால் அதிகார சபைக்கு மீள ஒப்படைக்கப்படல் வேண்டும்.


13. (1) நான்காவது தடவையின் பின்னர் சீருடை மற்றும் அடையாள அட்டை தொடர்பான கட்டளைகளை மீறும் சாரதிகள்/ நடத்துநர்கள் கடமையாற்றும் பேரூந்துகள் தடைப்பட்டியலில் உட்படுத்தப்படல் வேண்டியதுடன், இரு தடவைக்கு மேல் தடைப்பட்டியலில் உட்படுத்துவதன் காரணமாக குறித்த உரிமையாளரின் அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்த அல்லது இரத்துச் செய்ய வேண்டி நேரிடும்.

(2) அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல் பெறாமல் சீருடை மற்றும் அடையாள அட்டை தொடர்பான கட்டளைகளை மீறுவது தொடர்பாக தடைப்பட்டியல்படுத்தப்பட்ட ஏதாவது பேரூந்து ஒன்றிற்கு பயணம் வழங்குவது அல்லது மாதாந்த ஓட்டக் குறிப்புகளை வழங்குவதற்கு அதிகார சபையின் யாதேனும் உத்தியோகத்தருக்கும் அதிகாரம் இல்லை.

14. **சீருடை** - அரைக் கை ரி - சேட் வகையிலான மேற்சட்டையாகும். இடது மற்றும் வலது மேற் பக்கங்களில் இரு பொதிப் பைகள் (Pockets) ஆகும். இடது பக்க பொக்கெட்டில் அதிகார சபை இலட்சினை மற்றும் EPRPTA என்பது எம்ரொயிடர் முறையில்

இடப்பட்டிருக்கும். சீருடை முழுமையாக மெரூன் நிறமாக இருக்க வேண்டியதுடன் கழுத்துப் பட்டி மற்றும் கையின் எல்லைக் கோடுகள் செம்மஞ்சள் பொன்னிறமாக இருத்தல் வேண்டும். துணி வகை முதலை (Crocodile) எனத் தெரிவு செய்யப்பட்டது. சீருடை இதில் முதலாவது பட்டியலுக்கமைய இருக்க வேண்டும்.

**அட்டவணை 01**





15. **சாரதி/நடத்துநர்களது அடையாள அட்டை**

i. அலுவலக அடையாள அட்டை - அடையாள அட்டையின் அளவு நீளம் செ. மீ. 8.5 மற்றும் அகலம் செ. மீ. 6.0 ஆகும். அவற்றில் முன் பக்க மேல் பகுதியில் அதிகார சபை இலட்சினையுடன் முகவரி குறிப்பிடப்படல் வேண்டும். வெள்ளை நிறமுடைய பின்புறத்தில் கறுப்பு நிறத்திலான எழுத்தால் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. அலுவலக அடையாள அட்டை இவ் அட்டவணை 02 இல் குறிப்பிட்டவாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை 02**



iii. முன்பக்க கீழ்ப் பகுதியில் செ. மீ. 2.5 நீளமாகவும் செ. மீ. 3.5 அகலமாகவும் ஊழியரது படம் உள்ளடக்கப்படல் வேண்டும். அலுவலக அடையாள அட்டையில் கீழ்க் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடக்க வேண்டும்.

1. அடையாள அட்டையின் தொடர் இலக்கம்
2. முதலெழுத்துக்களுடன் ஊழியரது பெயர்
3. அடையாளக் குறியீடு (Bar Code)
4. அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதி
5. ஊழியரது தேசிய அடையாள அட்டை இலக்கம்
6. அலுவலக அடையாள அட்டை காலாவதியாகும் திகதி

iv. அலுவலக அடையாள அட்டையின் பின் பக்கத்தில் கீழ்க் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடக்க வேண்டும்.

1. ஊழியரது நிரந்தர முகவரி
2. அடையாள அட்டை உரிமையாளர் சாரதியாக இருப்பின் சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்
3. ஊழியரது கையொப்பம்
4. அதிகாரமளிக்கும் உத்தியோகத்தரது கையொப்பம்

v. அலுவலக அடையாள அட்டையின் பின் பக்கத்தின் கீழ்ப் பகுதியில் கீழ்வரும் வாசகங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**"2009 ஆண்டின் 02 ஆம் இலக்க கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. பேரூந்தில் கடமையாற்றும் எந்நேரத்திலும் இவ் அடையாள அட்டை அணிந்திருத்தல் வேண்டும்".**

### பிரிவு II - இலத்திரனியல் பயணச்சீட்டு வழங்குதல்

16. கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தினால் அல்லது வேறு அதிகாரங்களின் ஊடாக பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பேரூந்துகளிலும் பயணிக்கும் அனைத்துப் பயணிகளுக்கும் அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பயணச் சீட்டு வழங்கும் இயந்திரத்தின் ஊடான பாவனையினால் பயணச் சீட்டு வழங்கப்படல் வேண்டும்.

17. பயணச் சீட்டு இயந்திரத்தின் பாவனை தொடர்பாக அனுமதிப் பத்திர உரிமையாளரால் தனக்குவழங்கப்பட்ட அனுமதிப்பத்திர புத்தகம் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு ஒப்படைத்து பயணச்சீட்டு இயந்திரத்தில் விபரம் உட்படுத்த வேண்டும்.

18. குறிப்பிட்ட பேரூந்தில் பிரயாணஞ் செய்யும் பயணிகளுக்கு பயணச் சீட்டுக்களை வழங்குவதற்கு பாவிக்கும் இயந்திரம் அதிகார சபையின் பிரதம அலுவலகத்தில் ஒப்படைத்து அனுமதிப்பத்திர புத்தகத்தில் குறிப்பிடல் வேண்டும். ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு தடவையாவது அதிகார சபையினால் விதிக்கப்படும் எச் சந்தர்ப்பத்திலும் அதிகார சபைக்கு பயணச்சீட்டு இயந்திரத்தை ஒப்படைத்து விபரம் புதுப்பித்துக் கொள்ளப்படல் வேண்டும்.

19. பயணிகளுக்கு பயணச் சீட்டுக்களை வழங்குவதற்கு பாவிக்கப்படும் பயணச்சீட்டு இயந்திரத்தினை நடமாடும் பரிசோதகர்கள் அல்லது அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பரிசோதனைக்கு கோரப்படுகின்ற எச் சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்ட பேரூந்து நடத்துநரால் உடனே சமர்ப்பிக்க வேண்டும்.

20. பயணச் சீட்டு இயந்திரத்தினால் வழங்கப்படும் ஒவ்வொரு பயணச் சீட்டிலும் கீழ்க் குறிப்பிட்ட அனைத்து விடயங்களும் ஒழுங்காகவும் சரியாகவும் தெளிவாகவும் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

1. பேரூந்து இலக்கம்
2. அனுமதிப்பத்திர இலக்கம்
3. திகதி
4. நேரம்

5. பயணச்சீட்டு தொடர் இலக்கம்
6. பயணத்தை ஆரம்பித்த இடம்
7. பயணம் முடிக்கப்படும் இடம்
8. கட்டணம்
9. நடத்துநரது பதிவிலக்கம்
10. சாரதியினது பதிவிலக்கம்
11. பேருந்திற்குரிய காப்புறுதி நிறுவனம்

21. தினசரி வழங்கப்பட்ட பயணச் சீட்டுக்கள் தொடர்பான அறிக்கைகளை திகதி, மாத மற்றும் வருட ஒழுங்கிற்கமைய தயாரித்து அதிகார சபையினால் கோரப்பட்ட எச்சந்தர்ப்பத்திலும் சமர்ப்பிக்கக் கூடியவாறு பேருந்து உரிமையாளரால் பேருந்தில் பாதுகாப்பாக வைத்திருக்கப்படல் வேண்டும்.

22. மாற்றப்பட்ட, திருத்தியமைக்கப்பட்ட அல்லது தெளிவில்லாத அல்லது அதிகார சபையினால் கட்டளையிடப்பட்ட விபரங்கள் உள்ளடங்காத ஒரு பயணச்சீட்டு எச்சந்தர்ப்பத்திலும் நடத்துநரால் பயணிகளுக்கு வழங்கப்படலாகாது.

23. பயணச்சீட்டு வழங்குவதில் குறைபாடுகள் உள்ள அல்லது அச்சிடுவதில் குறைபாடுகள் உள்ள பயணச்சீட்டு இயந்திரம் எச்சந்தர்ப்பத்திலும் நடத்துநரால் பாவனைக்கு உட்படுத்தலாகாது.

24. பயணச்சீட்டு இயந்திரத்தில் எதிர்பாராத பாதிப்புக்கள் அல்லது செயலிழப்புக்கள் ஏற்பட்டால் அது தொடர்பாக அருகிலுள்ள பேருந்து நிலையத்தில் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தெரியப்படுத்தி அறிவுறுத்தல் தொடர்பாக மாதாந்த ஓட்டப் பதிவேட்டில் குறிப்பிட்டு மேற்குறிப்பிட்ட நிலையப் பொறுப்பதிகாரியினால் மாதாந்த ஓட்டப் பதிவேட்டில் குறிப்பிட்டு அவரது கையொப்பம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

25. பயணச்சீட்டு வழங்குவதில் தவிர்க்க முடியாத பாதிப்பு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் பயணச்சீட்டுக்களை வழங்குவதற்கு அதிகார சபையினால் வழங்கப்பட்ட பயணச்சீட்டுப் புத்தகம் ஒன்றை பேருந்தில் வைத்திருக்க வேண்டியதுடன் அவ்வாறு வழங்கப்படும் பயணச்சீட்டுக்கள் வீதிப் பயணப்புத்தகத்துடன் தொடர்புடையவாறு வழங்கப்படல் வேண்டும்.

26. பயணச்சீட்டு இயந்திரத்தினை செயலிழப்பும் அல்லது பயணச்சீட்டுக்களை பிழையாக அச்சிடப்படும் வண்ணம் அல்லது இயந்திரத்தினை எந்த வகையான மாற்றத்திற்கும் உட்படுத்தும் வகையில் கையாள முடியாததுடன் பயணச்சீட்டு இயந்திரத்தினை சரியான முறையில் பாவிப்பது குறிப்பிட்ட பேருந்தில் நடத்துநரது பொறுப்பாகும்.

27. பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்கும் அனைத்து பயணச்சீட்டு இயந்திரத்திற்கும் கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் வழங்கப்படும் தர மதிப்பீட்டுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

28. (i) அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படாத ஓர் இயந்திரத்தினால் பயணச்சீட்டுகளை வழங்கும் தவறுக்கு நடத்துநர் குற்றவாளி ஆவதுடன் அட்டவணை 03 இல் 05 ஆவது நிரலில் குறிப்பிட்ட நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

(ii) அதிகார சபையினால் விதிக்கப்பட்ட விபரம் உள்ளடங்காத, தெளிவின்மையான, மாற்றப்பட்ட அல்லது திருத்தியமைக்கப்பட்ட பயணச்சீட்டு வழங்கும் நடத்துநர் குற்றவாளியாக கருதப்படுவதுடன் அட்டவணை 03 இன் 06 ஆவது நிரலில் குறிப்பிட்டவாறு ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

(iii) பயணச்சீட்டு இயந்திரம் மற்றும் பயணச்சீட்டு இயந்திரத்தினால் பயணச்சீட்டு வழங்குதல் தொடர்பாக மேற்குறிப்பிட்ட i மற்றும் ii பந்திகளில் குறிப்பிட்ட தவறுகள் தவிர பயணச்சீட்டு இயந்திரம் மற்றும் பயணச்சீட்டு இயந்திரத்தினால் பயணச்சீட்டு வழங்குதல் தொடர்பாக ஏனைய கட்டளைகளை மீறும் நடத்துநர் குற்றவாளியாக கருதப்படுவதுடன் அட்டவணை 03 இல் 04 ஆவது நிரலில் குறிப்பிட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

(iv) அதிகார சபையினால் கோரப்படும் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட பேருந்தில் பயணச்சீட்டு இயந்திரத்தினால் வழங்கப்பட்ட பயணச்சீட்டுக்கள் தொடர்பான தினசரி, மாதாந்த மற்றும் வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறும், கருத்திற் கொள்ளாத மற்றும் தவறும் அனுமதிப்பத்திர உரிமையாளர் அல்லது பொய்யான அறிக்கைகளை வழங்கும் அனுமதிப்பத்திர உரிமையாளர் கட்டளைகளை மீறுதல் தொடர்பான குற்றவாளியாக கருதப்படுவதுடன் அட்டவணை 03 இல் 01, 02, 03, 07 மற்றும் 08 ஆம் நிரல்களில் குறிப்பிட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

29. (i) பயணச்சீட்டு இயந்திரம் மற்றும் பயணச்சீட்டு இயந்திரத்தினால் பயணச்சீட்டு வழங்குதல் தொடர்பாக மூன்றாவது தடவைக்குப் பின்னரும் கட்டளைகளை மீறும் செயல் அவதானிக்கப்படுமிடத்து நடத்துநர்களது நடத்துநர் அடையாள அட்டை இரத்துச்

செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட நீக்குதல் தொடர்பாக அதிகார சபையினால் குறிப்பிட்ட நடத்துநருக்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 07 நாட்களுக்குள் குறிப்பிட்ட நடத்துநர் தனது நடத்துநர் அடையாள அட்டையை அதிகார சபைக்கு மீள ஒப்படைத்தல் வேண்டும்.

(ii) மூன்றாவது தடவைக்குப் பின்னர் பயணச்சீட்டு இயந்திரம் மற்றும் பயணச்சீட்டு இயந்திரத்தினால் பயணச்சீட்டு வழங்குதல் தொடர்பாக கட்டளைகளை மீறும் நடத்துநர்கள் கடமையாற்றும் பேருந்தினையும் தடைப்பட்டியலில் உட்படுத்த வேண்டியதுடன் இரு தடவைகளுக்கு மேல் தடைப்பட்டியலில் பதிவிடப்படுவதன் காரணமாக குறிப்பிட்ட பேருந்தில் பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தினை இடைநிறுத்தஞ் செய்ய அல்லது இரத்துச் செய்ய ஏதுவான காரணமாக அமையும்.

(iii) அதிகார சபையில் பணிப்பாளர் நாயகம் அவர்களது அறிவுறுத்தல் பெறாமல் பயணச்சீட்டு இயந்திரம் மற்றும் பயணச்சீட்டு இயந்திரத்தினால் பயணச்சீட்டு வழங்குதல் தொடர்பாக தடைப்பட்டியலில் உட்படுத்த ஏதாவது பேருந்துக்கு பயண முறை வழங்குவது அல்லது மாதாந்த ஓட்டக் குறிப்பு வழங்குவது என்பன அதிகார சபையின் ஏதாவது அலுவலரால் நிறைவேற்ற முடியாத பணியாகும்.

அட்டவணை 03

பயணிகளின் பாதுகாப்பு மற்றும் வசதிகளை உறுதிப்படுத்தும் கட்டளைகளை/நிபந்தனைகளை மீறுவதன் காரணமாக எடுக்கப்படும் நடவடிக்கைகள்/நிருவாகச் செலவு அறவிடுதல் (1)

| கட்டளை மீறுவதின் தன்மை | 1ஆவது நடவடிக்கை | 2ஆவது நடவடிக்கை | 3ஆவது நடவடிக்கை | 4ஆவது நடவடிக்கை | 5ஆவது நடவடிக்கை | 6ஆவது நடவடிக்கை | 7ஆவது நடவடிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கடுமையான தவறுகள் | | | | | | | |
| 1. குறிப்பிட்ட கட்டணத்திற்கு குறைவாக அல்லது கூடுதலாக அறவிடுதல் | | | | | | | |
| 2. கட்டணப் பட்டியலை காட்சிக்கு வைக்கப்படாமை | | | | | | | |
| 3. கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகார மளிக்கப்பட்ட உத்தியோகத் தர்களுக்கு (வீதி/நடமாடும் பரிசோதகர், நிலையப் பொறுப் பதிகாரிகள், நேரக்கணிப்பா ளர்கள் உட்பட உத்தியோகத் தர்கள்) அச்சுறுத்தல் மற்றும்/ அல்ல து ஏசுதல் மற்றும்/ அல்லது உடல் சார்ந்த தாக்குதல் | உத்தரவு மற்றும் ரூ. 2,500 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 5,000 அறவிடுதல | தடைப் பட்டியலில் உட்படுத்தல் i | தடைப் பட்டியலில் உட்படுத்தல் ii | அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் | - | - |
| முக்கிய தவறுகள் | | | | | | | |
| 4. அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் டிக்கெட் இயந்திரத்தினை | உத்தரவு மற்றும் ரூ. 1,500 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 2,500 அறவிடுதல் | கடும் உத்தரவு மற்றும் ரூ. 5,000 அறவிடுதல் | தடைப்பட்டி யலில் உட்படுத்தல் i | தடைப்பட்டி யலில் உட்படுத்தல் ii | அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் | - |

| கட்டளை மீறுவதின் தன்மை | | 1ஆவது நடவடிக்கை | 2ஆவது நடவடிக்கை | 3ஆவது நடவடிக்கை | 4ஆவது நடவடிக்கை | 5ஆவது நடவடிக்கை | 6ஆவது நடவடிக்கை | 7ஆவது நடவடிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பரிசோதனைக்கு உட்படுத்த ஒத்துழைக்காமை, மறுத்தல் மற்றும்/அல்லது பொய்யான தகவல் அறிக்கைகளை வழங்குதல். | | | | | | | |
| 5. | குறிப்பிட்ட சேவைக்கு அனுமதிக்கப்பட்ட பயணச் சீட்டு இயந்திரத்தைத் தவிர வேறு பயணச்சீட்டு இயந்திர த்தினால் பயணச்சீட்டு வழங்குதல். | உத்தரவு மற்றும் ரூ. 1,000 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 1,500 அறவிடுதல் | கடும் உத்தரவு மற்றும் ரூ. 5,000 அறவிடுதல் | தடைப்பட்டியலில் உட்படுத்தல் i | தடைப்பட்டியலில் உட்படுத்தல் ii | அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் | - |
| 6. | தெளிவில்லாத, திருத்திய மைக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட பயணச்சீட்டு வழங்குதல். | உத்தரவு மற்றும் ரூ. 500 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 1,000 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 2,500 அறவிடுதல் | கடும் உத்தரவு மற்றும் ரூ. 2,500 அறவிடுதல் | தடைப்பட்டியலில் உட்படுத்தல் i | தடைப்பட்டியலில் உட்படுத்தல் ii | அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் |
| 7. | கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை உத்தியோகத் தர்களது உத்தரவுகளுக்கு கீழ்ப்படியாமை. | உத்தரவு மற்றும் ரூ. 1,000 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 2,500 அறவிடுதல் | கடும் உத்தரவு மற்றும் ரூ. 6,000 அறவிடுதல் | தடைப்பட்டியலில் உட்படுத்தல் i | தடைப்பட்டியலில் உட்படுத்தல் ii | அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் | - |
| 8. | பயணிகளுக்கு இரக்கமற்ற நடத்தை | உத்தரவு மற்றும் ரூ. 1,000 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 3,000 அறவிடுதல் | கடும் உத்தரவு மற்றும் ரூ. 5,000 அறவிடுதல் | தடைப்பட்டியலில் உட்படுத்தல் i | தடைப்பட்டியலில் உட்படுத்தல் ii | அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் | - |
| 9. | பேருந்தினை செலுத்தும் பொழுது சாரதி/நடத்துநர் சீருடை/அடையாள அட்டை அணியத் தவறுதல். | உத்தரவு மற்றும் ரூ. 1,000 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 2,000 அறவிடுதல் | உத்தரவு மற்றும் ரூ. 3,000 அறவிடுதல் | கடும் உத்தரவு மற்றும் ரூ. 5,000 அறவிடுதல் | தடைப்பட்டியலில் உட்படுத்தல் i | தடைப்பட்டியலில் உட்படுத்தல் ii | அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்தல் |

*10 - 440*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.